## மாகாண வீதிச் செயற்திட்டம் – செயற்திட்ட ஒருங்கிணைப்பு அலகின் 2015

மாகாண வீதிச் செயற்திட்டம் – செயற்திட்ட ஒருங்கிணைப்பு அலகின் 2015 சனவரி 01 தொடக்கம் ஒக்தோபர் 15 வரையான காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி முகவராண்மைக்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 சனவரி 11 ஆந் திகதிய 4630 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.09(பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சும் தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளது. மேம்படுத்தப்பட்ட வீதி உட்கட்டமைப்புக்களின் நிலையான முகாமைத்துவத்தினூடாக ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலுள்ள சமூக – பொருளாதார நிலையங்களுக்கான நுழைவுப் பாதைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்ட ஒருங்கிணைப்பு அலகிற்கான செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 475 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.8 மில்லியனானதுடன் மொத்தத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 மார்ச் 31 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட போதிலும் 2015 ஒக்தோபர் 15 வரை செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடரப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது.

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது
அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 ஒக்தோபர் 15 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 ஒக்தோபர் 15 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 ஒக்தோபர் 15 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2010 ஒக்தோபர் 10 ஆம் திகதிய எம்ஓஎவ்பி 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையால் நிர்ணயிக்கப்பட்டதற்கமைவாக நாளொன்றிற்கு ஐ.அ.டொலர் 30 படிகளிற்கு தகுதியான போதிலும் செயற்திட்டம் மீளாய்வுக் காலப்பகுதியின் போது சீனாவிற்கு விஜயம் செய்திருந்த 10 உத்தியோகத்தர்களிற்கான இடைநேர் செலவினங்களிற்காக நாளொன்றிற்கு ஐ.அ.டொலர் 50 தொகையான படிகளை செலுத்தியிருந்தது. ஆகையால் ரூபா 224,000 தொகை செயற்திட்டத்தால் மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. மேலும் வெளிநாட்டு விஜயங்களின் பின்னர் நாட்டிற்குத் திரும்பிய பின்னர் 07 நாட்களுக்குள் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 ஒக்தோபர் 15 இலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வுக் காலப்பகுதிக்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வுக் காலப்பகுதியின் போது மற்றும் 2015 ஒக்தோபர் 15 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வுக் காலப்பகுதிக்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வுக் காலப்பகுதியின் போது | | 2015 ஒக்தோபர் 15 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 3.80 | 475 | 46 | 0.25 | 33.30 | 2.65 | 332.04 |
| இலங்கை அரசாங்கம் | - | - | - | - | 8.20 | - | 9.53 |
| | 3.80 | 475 | 46 | 0.25 | 41.50 | 2.65 | 341.57 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், கடன் உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 475 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.8 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 334.2 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.65 மில்லியன் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கடன் வழங்கும் முகவருடன் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் ஈடுபட்ட ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள செயற்திட்ட அமுலாக்கல் பிரிவுகளை ஒருங்கிணைப்பதற்கு செயற்திட்டத்தின் செயற்திட்ட ஒருங்கிணைப்பு பிரிவு பொறுப்பாக இருந்தது. ஆகையால் செயற்திட்ட அமுலாக்கல் பிரிவினால் இணங்கப்பட்ட 06 நிர்மாண வேலைகள் மீதான கொள்வனவுகள், ஆலோசனை மேற்பார்வைகள் மற்றும் தொழில்நுட்ப உதவி போன்ற துணைச் சேவைகள் மற்றும் அவற்றின் மீதான சமூக மற்றும் சுற்றுச்சூழல் விடயங்கள் செயற்திட்ட ஒருங்கிணைப்பு பிரிவினால் பூரணப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

வரிசை அமைச்சின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் 2015 மார்ச் இறுதியில் சீனாவிற்கு கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டிருந்ததுடன் செயற்திட்டத்தால் கற்கைநெறிக் கட்டணம், வாழ்க்கைச் செலவு மற்றும் விமானப் பயணச்சீட்டு போன்றவற்றுக்காக ரூபா 12.95 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. உள்ளூர் முகவரொருவரூடாக தாய்லாந்தில் உள்ள நிறுவனமொன்றினால் அந்தப் பிரயாணம் ஏற்பாடு செய்யப்பட்டது என குறிப்பிடப்பட்ட போதிலும் இந்த கல்விச் சுற்றுலாவில் சொல்லப்பட்ட நிறுவனம் ஈடுபட்டிருக்காததுடன் அதற்கான உள்ளூர் முகவர்களை நியமித்துமிருக்கவில்லை என உரிய நிறுவனம் கணக்காய்வாளர்களுக்கு நேரடியாக தெரிவித்திருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2015 சனவரி 31 மற்றும் மார்ச் 31 இல் உள்ளூர் முகவராகவுள்ள நிறுவனத்துடனான உறவினை உறுதிப்படுத்துவதற்கு போலி ஆவணமொன்றை சமர்ப்பித்திருந்த நபரொருவருக்கு கற்கைநெறிக் கட்டணங்களாக ரூபா 6.73 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

செயற்திட்டப் பதவியணியினருக்கு வழங்கப்பட்ட காசு முற்பணங்கள் மீதான நிதிக் கட்டுப்பாடுகள் செயற்திட்டக் கண்காணிப்பு அலகினால் திருப்திகரமாக அமுலாக்கப்படவில்லை. நிதிப் பிரமாணம் 371 (அ) இன் பிரகாரம் முற்பணங்கள் உரிய நோக்கங்கள் பூர்த்தி செய்யப்பட்ட உடனே தீர்க்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட போதிலும் 03 உத்தியோகத்தர்களால் 17 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 460,000 கூட்டுத்தொகையான காசு முற்பணங்கள் 22 நாட்கள் முதல் 188 நாட்கள் வரையான வீச்சு கால தாமதங்களுடன் தீர்க்கப்பட்டிருந்தன. அவற்றில் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் ரூபா 10,000 மற்றும் ரூபா 40,000 தொகையான முழு முற்பணங்கள் முறையே 22 நாட்கள் மற்றும் 61 நாட்கள் கால தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தன.

## 3.5 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தல்

செயற்திட்டச் செயற்பாடுகள் 2015 ஒக்தோபர் 15 இல் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் காலத்திற்கு காலம் மாகாண வீதி அதிகாரசபைகளிற்கு ரூபா 25.96 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை கையளிப்பதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் உரிய முகவர்களால் கையேற்கப்பட்ட சொத்துக்களை உறுதிப்படுத்துவதற்கு ஆவணச் சான்று எதுவும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் நிறைவேற்று முகவர் செயற்திட்டக் கணக்குகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அதற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுமிருக்கவில்லை.